செ.வெ.எண் : 28/ ஆகஸ்ட் /2020 நாள்: 14.08.2020

## பத்திரிக்கை செய்தி

இந்திய திருநாட்டின் 74வது சுதந்திர திருநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படை மைதானதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 15.08.2020 அன்று தேசியக் கொடியினை ஏற்றி சிறப்பிப்பார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின நிகழ்ச்சியில் சுதந்திர போரட்ட தியாகிகளும், பொது மக்களும், மாணவ, மாணவியர்களும், பள்ளிக் குழந்தைகளும் பங்கேற்பர். இந்த ஆண்டு கொரோனா தொற்றால் நிலவும் அசாதாரண சூழ்நிலையினை கருத்திற்கொண்டு பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டாம்மென அறிவுறுத்தப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி ஆயுதப்படை மைதானத்தில் நடைபெறும் சுந்திர தின நிகழ்ச்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட முன்களப் பணியாளர்களை சிறப்பிக்கும் விதமாக அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள். சுதந்திர தின நிகழச்சிகளை உள்ளுர் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொரோனா நோய் தொற்றை தடுக்கும் விதமாக இந்த ஆண்டு பொதுமக்கள் மாணவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் விழாவை காண நேரில் வர வேண்டாம் எனவும், சுதந்திர தின நிகழ்ச்சிகளை உள்ளுர் தொலைக்காட்சிகளின் மூலம் கண்டு மகிழுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறேன்.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். **விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு** என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**